## வரதான தாதாவின் வரதானங்களின் மூலம் அவ்யக்த பாலனை

| |
|---|
| என்னுடைய பாபா இந்த சங்கல்பத்தின் மூலம் ஒவ்வொரு அடியிலும் பாபாவின் உதவியை அனுபவம் செய்யக் கூடிய நிச்சய புத்தி உடையவர் நீங்கள். |
| சதா பாபாவின் ஒளி மற்றும் சக்திக்குள் இருக்கக்கூடிய மாயைக்கு சவால் விடக் கூடிய ஆத்மா நீங்கள். |
| சூட்சும சக்திகளின் மூலம் ஸ்தூல கர்ம இந்திரியங்களை ஈஸ்வரிய நியமங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் சுய ராஜ்ய அதிகாரி நீங்கள். |
| ஆயிரம் கைகளுடய பாபாவின் துணையின் மூலம் சதா உற்சாகமாக இருக்க கூடியவர் நீங்கள்.. |
| யாரிடமிருந்தும் விலகிக் கொள்வதற்கு பதிலாக அனைவருக்கும் உதவியாளர் ஆகக் கூடிய விஷ்வ கல்யாண்காரி நீங்கள். |
| கர்ம போகத்தினை வர்ணணை செய்வதற்கு பதிலாக கர்ம யோகத்தினை வர்ணனை செய்யும் பரிவர்த்தனை ஸ்வரூபம் நீங்கள்.. |
| சதா நீங்கள் உங்கள் மீது நம்பிகை வைத்து அரசரைப் போல உயர்ந்த மனம் உடையவராகி,சதா பெரிய மற்றும் விசாலமான மனம் உடையவர் நீங்கள்.. |
| |

தனது மனம் புத்தி சம்ஸ்காரத்தின் மீது முழுமையாக ராஜ்ஜியம் செய்யும் சுயராஜ்ஜிய அதிகாரி நீங்கள்..

தன்னுடைய மலர்ந்த முகத்தின் மூலம் பிரபுவிற்கு பிடித்தமானவர் ஆகக் கூடிய குஷிகளின் பொக்கிஷத்தில் நிரம்பியவர் நீங்கள்..

நிராகாரி நிரகங்காரிய ஸ்திதியில் நிலைத்திருந்து உலகை பிரகாசிக்கச் செய்யும் சைத்தன்யமான தீபம் நீங்கள்..

இதயம் நிறைந்த அன்பு மற்றும் சம்மந்தத்தின் ஆதாரத்தில் நெருக்கத்தை அனுபவம் செய்யக்கூடிய நிரந்தர யோகி நீங்கள்..

ஒவ்வொருவருடைய சுபாவம் சம்ஸ்காரத்தையும் அறிந்து மோதிக்கொள்வதற்கு பதிலாக பாதுகாப்பாக இருக்கும் நாலெஜ்ஃபுல் ஆத்மா நீங்கள்..

சதா பாக்கியம் மற்றும் பாக்கிய விதாதாவின் நினைவில் இருந்து பறக்கும் கலையின் அனுபவம் செய்யக்கூடிய பறக்கும் பறவை நீங்கள்..

**சமீபம், சம்பந்தம் மர்றும் சர்வபிராப்தி மூலம் சகஜ யோகி ஆகக்கூடிய சர்வசித்தி ஸ்வரூபம்** நீங்கள்..

ஒருபோதும் எல்லைக்குட்பட்ட பெயர் புகழ் ஆகியவற்றில் வராத எப்போதும் ஆன்மீகப் பெருமையில் இருப்பவர் நீங்கள்..

| |
|---|
| தைரியமான எண்ணத்தின் மூலம் மாயையை தைரியமற்றதாக ஆக்கக் கூடிய தைரியசாலி ஆத்மா நீங்கள்.. |
| பணிவு என்ற சிம்மசனத்தில் அமர்ந்து பொறுப்பு என்ற கிரீடத்தை அணிந்து கொள்ளும் சிரேஷ்டமான ஆத்மா நீங்கள்.. |
| இல்லறத்தில் இருந்தாலும் சமர்ப்பணத்துடன் இருந்து சேவையில் ஆர்வத்துடன் இருக்கக்கூடிய பாப்தாதாவின் உள்ளம் என்ற சிம்மாசனத்தில் அமரக்கூடியவர் நீங்கள். |
| குறைந்ததிலும் குறைந்த நேரத்தில் எண்ணங்களை திருப்புதல் மற்றும் நிறுத்துவதற்கான யுக்தியின் மூலம் புத்தியின் சக்தியை சேமிக்கும் ஆத்மா நீங்கள்.. |
| சம நிலையின் அனுபவம் நிறைந்த வாழ்க்கையை காட்சி செய்விக்கக்கூடிய அனைவருடைய ஆசிர்வாதத்திற்கும் பாத்திரமாகும் ஆத்மா நீங்கள்.. |
| ஒவ்வொரு கஷ்டத்தையும் சகஜமாக்கி மலையை கடுகாக அல்லது பஞ்சு போல ஆக்கும் மகாவீரர் நீங்கள்.. |
| தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலமாக சேவை செய்யக்கூடிய நிரந்தர யோகி நிரந்தர சேவாதாரி நீங்கள்.. |
| மாயாவால் அசைக்க முடியாத அனுமானுக்கு சமமாக எப்பொழுதும் ஆடாத அசையாத ஒரே நிலையில் இருக்கக் கூடியவர் நீங்கள்.. |
| |

தெளிவான புத்தியின் மூலமாக ஒவ்வொரு விஷயத்தினையும்பகுத்தறிந்து சரியான நிர்ணயம் செய்யக் கூடிய வெற்றி மூர்த்தி நீங்கள்..

நினைவு மற்றும்சேவை மூலமாக எலலா சக்கரங்களையும் நீக்கி ஒளி மீது சமர்ப்பணம் ஆகிவிடும் உண்மையான விட்டில் பூச்சி நீங்கள்..

புத்தியின் வியத்தகு திறமையினால் ஆகாரில் சாகாரை அனுபவம் செய்யக்கூடிய திலாராமின் தில்ரூபா நீங்கள்.

அன்பு என்ற மந்திரத்தின் மூலம் பந்தனமற்றவரையும் பந்தனத்தில் கட்டக்கூடிய மந்திரவாதி ஆத்மா நீங்கள்..

தன்னுடைய சுய ஸ்திதியின் மூலம் பரஸ்திதியை மாற்றக்கூடிய குழப்பத்தில் வராதவர் நீங்கள்..

ஒரே நேரத்தில் மனம்,சொல்,மற்றும்செயலின் மூலம் ஒன்றாக சேர்ந்து சேவை செய்யக்கூடிய வெற்றி நிறைந்தவர் நீங்கள்..

தன்னுடையது என்ற அதிகாரத்தின் அனுபவத்தின் மூலம் அடிமைத் தன்மையை முடிக்க கூடிய அனைத்து அதிகாரங்களும் நிறைந்தவர் நீங்கள்..

தன்னுடைய சம்ஸ்காரம் அல்லது குணங்களை அனைவருடனும் கலந்து கொண்டு செல்லும் விஷேஷ ஆத்மா நீங்கள்..

அனேக விதமான அக்னியிலிருந்து பாதுகாப்பாக இருக்கக் கூடிய மற்றும் அனைவரையும் பாதுகாக்கக் கூடிய உண்மையான இரக்க மனமுடையவர் நீங்கள்..

ஒரு தந்தை மேல் உள்ள உண்மையான அன்பினால் சதா அசரீரி ஆகும் ஆத்மா நீங்கள்..

தன்னுடைய சூட்சுமமான சக்திகளை ஸ்தாபனையினுடைய காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய மாஸ்டர் படைப்பாளர் நீங்கள்..

தனது சக்தி ஸ்வரூபம் மூலமாக அலௌகீக தன்மையை அனுபவம் செய்விக்கும் ஜுவாலை ரூபம் நீங்கள்..

தங்களது கர்ம இந்திரியங்களை யோக அக்னியில் அடக்கி வைத்து சம்பூர்ண பாவனம் ஆகும் ஆத்மா நீங்கள்..

திருப்தியின் நற்சான்றிதழ் மூலம் வருங்கால ராஜ்ய பாக்யத்தின் சிம்மாசனத்தை அடையக் கூடிய திருப்தி மூர்த்தி நீங்கள்...

தங்களுக்குள் அன்பு மற்றும் திருப்தி நிறைந்த விவகாரங்களைச் செய்யக் கூடிய வெற்றி மூர்த்தி நீங்கள்...

வரதானங்களின் தெய்வீகப் பாலனை மூலம் சகஜ மற்றும் சிறந்த வாழ்க்கையின் அனுபவம் செய்யக் கூடிய சதா குஷியின் அதிர்ஷ்டம் நிறைந்தவர் நீங்கள்.

கர்மச் சுமைகளை கர்மயோகமாக மாற்றி சேவைக்கு நிமித்தமாக ஆகக் கூடிய பாக்கியவான் நீங்கள்...

கருணை மற்றும் சுப பாவனை உடைய திருஷ்டி மூலம் அபிமானம் அல்லது அவமானத்திற்கான திருஷ்டியை முடிவுக்கு கொண்டு வருபவர் நீங்கள்...

ஒவ்வொரு ஆத்மாவின் சம்மந்தம் தொடர்பில் வந்து கொண்டே அனைத்து கேள்விகளிலிருந்து கடந்து இருக்கக் கூடிய எப்போதும் முகமலர்ச்சியுடையோர் நீங்கள்...

ஸ்ரீமத்படி சரி பாபா என்று கூறி பாபாவின் உடன் இருத்தலை அனுபவம் செய்யக்கூடிய அனைத்து பிராப்திகள் நிரம்பியவர் நீங்கள்..

பரமாத்மா ஆஸ்தியின் அதிகாரியாகி மாயாவின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு இருக்கக் கூடியவர் நீங்கள்.

ஒவ்வொரு சமயம்,சங்கல்பம்,வினாடியை சங்கமயுகத்தில்சக்திசாலியாக ஆக்கக் கூடிய ஞஆன ஸ்வரூபம் நீங்கள்.

சேவையில் சதா ஆஜராக இருந்து அன்பின் அடையாளத்தை வெளிப்படுத்தக் கூடிய உண்மையிலும் உண்மையான ஆத்மா நீங்கள்.

சாதனம் அல்லது வசதிகளின் பிரபாவத்தில் வருவதற்கு பதிலாக இயற்கையை தாசியாக ஆக்கிவிடும் வெற்றியாளர் நீங்கள்.

ஒவ்வொரு நொடியையும் கடைசி நொடி என்று கருதி நடக்கும் எவர் ரெடி ஆத்மா நீங்கள்.

விகாரங்கள் ரூபப் பாம்புகளைக் கழுத்துக்கு மாலையாக ஆக்கி விடக் கூடிய உண்மையான தபஸ்வி நீங்கள்.

பிராமண வாழ்க்கையில் நினைவு மற்றும் சேவையின் ஆதாரம் மூலம் சக்திசாலி ஆகிக் கொண்டு மாயாவை வென்றவர் நீங்கள்.

அனைத்து சக்திகளும் நிறைந்தவராகி தடைகளை அழிப்பவர் நீங்கள்.

சர்வ சக்திகளின் அனுபவத்தை செய்தாலும் தகுந்த நேரத்தில் பலனை பிராப்தியாக அடையக்கூடிய உறுதியான வெற்றியுடையவர் நீங்கள்.

வீணானவைகளைப் பார்ப்பது மற்றும் கேட்பதற்கான சுமையை சமாப்தி செய்து சதா டபுள் லைட் நீங்கள்.

மகான் தன்மையின் கூடவே பணிவுத் தன்மையை தாரணை செய்து அனைவருடைய மரியாதையையும் அடையக்கூடிய சுகமுடையவர்கள் நீங்கள்.

குஷியின் பொக்கிஷங்களை எப்பொழுதும் உடன் வைத்து துக்கத்திற்கு விவாகரத்து கொடுக்கும் குஷி ஸ்வரூபம் நீங்கள்.

துக்கமான உலகத்திலிருந்து விலகிச்செல்லக் கூடிய சுகதேவன், சுகஸ்வரூபமானவர் நீங்கள்.

நினைவின் ஆதாரத்தில் சதா குஷி என்னும் ஊஞ்சலில் ஆடக் கூடிய குஷி நிறைந்த ஆத்மா நீங்கள்.

அமைதியின் சக்தியின் மூலமாக கெட்டதை நல்லதாக மாற்றக் கூடிய சுப பாவனை நிறைந்தவர் நீங்கள்.

பொறுமையை தாரணை செய்து கடுமையான சம்ஸ்காரத்தையும் சீதளமாக ( குளிர்ச்சியாக) மாற்றக் கூடிய சீதள ஸ்வரூப ஆத்மா நீங்கள்.

சூட்சும பாவங்களிலிருந்து விடுபட்டவராகி சம்பூர்ண ஸ்திதியை அடைந்து விடும் சித்தி ஸ்வரூப ஆத்மா நீங்கள்.

சக்தி, சாந்தி மற்றும் சர்வ குணங்களின் தூண் ஆகி ஆதி பிதாவிற்கு சமானமான ஆத்மா நீங்கள்

மனம்-புத்தியின் தூய்மை மூலம் யதார்த்த நிர்ணயம் செய்யக் கூடிய வெற்றி நிறைந்த ஆத்மா நீங்கள்.

சதா சிரேஷ்ட மற்றும் சுத்த சங்கல்பங்கள் மூலம் வீணானவற்றை அழித்து விடும் சிரேஷ்ட ஆத்மா நீங்கள்.

புத்தியை சுறுசுறுப்பாக வைக்கக்கூடிய விதி மூலம் வீணானதை முடிவிற்கு கொண்டு வரக் கூடிய சக்தி உள்ள ஆத்மா நீங்கள்..

பரமாத்மாவின் அன்பில் மூழ்கி இருந்து துக்கமான உலகத்தை மறக்கக் கூடிய ஆத்மா நீங்கள்.

தன்னுடைய சூட்சும சோதனை மூலமாக பாவங்களின் சுமையை முடிக்கக் கூடிய சமமான மற்றும் நிறைந்திருக்கும் ஆத்மா நீங்கள்.

சாக்குப் போக்கு சொல்வதை உள்ளடக்கி எல்லைக்கு அப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வை வெளிப்படுத்தும் ஆத்மா நீங்கள்.

பொய்யான பாவனைகளை முடித்து அவ்யக்த ஸ்திதியை அனுபவம் செய்யக் கூடிய நற்சிந்தனை நிறைந்த ஆத்மா நீங்கள்..

சதா சர்வ சக்திவான் பாபாவுடன் இணைந்திருக்கும், மாயாவை ஒரு காகிதப் புலியாக அனுபவம் செய்யும் ஆத்மா நீங்கள்..

சுப பாவனை மற்றும் உயர்ந்த உள் நோக்கம் மூலமாக அனைவருக்கும் பிரியமானவராகி வெற்றி மாலையில் உருட்டப்படக்கூடிய ஆத்மா நீங்கள்...

சதா கர்மத்தில் யோகத்தின்  அனுபவம் செய்யக் கூடிய கர்மயோகி ஆத்மா நீங்கள்..

அனைத்து ஆத்மாக்களின் கெட்ட நோக்கம் மற்றும் கெட்ட பாவனையை மாற்றக் கூடிய உலக மாற்றம் செய்யக் கூடிய ஆத்மா நீங்கள்..

அனுபவத்தின் சொரூபமாக ஆகி முகத்தில் மகிழ்ச்சியின் பொலிவுடன் காணப்படும் ஆத்மா நீங்கள்..

சுத்த சங்கல்பம் மற்றும் சிரேஷ்ட தொடர்பு மூலமாக லேசாகி குஷியின் நடனம் ஆடும் அலௌகீக பரிஸ்தா நீங்கள்...

பரமாத்ம அன்பின் பாலனையின் ஸ்வரூபமாகி சகஜ யோகி வாழ்க்கையை அனுபவம் செய்யும் ஆத்மா நீங்கள்.

அமிர்த வேளையில் மூன்று பிந்திகளின் திலகத்தை அணிந்து கொள்ளக் கூடிய சதா குழப்பத்திலிருந்து விடுபட்ட ஆடாத அசையாதவர் நீங்கள்.

பரிவர்த்தனை சக்தியின் மூலம் வீண் சங்கல்பங்கள் பெருகும் வேகத்தை முடித்து விடும் சக்திசாலி ஆத்மா நீங்கள்..

நல்ல எண்ணம் என்ற விதை மூலம், நல்ல பழத்தை அடையக்கூடிய வெற்றி சொரூபமான ஆத்மா நீங்கள்..

கர்ம யோகி ஆகி ஒவ்வொரு செயலையும் செய்யும் துக்கத்திலிருந்து விடுதலை பெறும் ஆத்மா நீங்கள்.

பணிவின் மூலமாக புதியதை படைக்கக்கூடிய நிராசை மற்றும் அபிமானத்திலிருந்து விடுபட்டிருக்கும் ஆத்மா நீங்கள்..

உலக சேவைக்கான சிம்மாசனதாரியாகி உலக ராஜ்ஜியத்தின் சிம்மாசனத்திற்கு அதிகாரியாகும் ஆத்மா நீங்கள்..

நிறம் மற்றும் வடிவத்தின் கூடவே முழுமையான தூய்மை எனும் நறுமணத்தை தாரணை செய்யக்கூடிய கவர்ந்திழுக்கும் மூர்த்தி நீங்கள்..

யதார்த்தமான சத்தியத்தை பகுத்தறிந்து அதீந்திரிய சுகத்தில் திளைத்திருக்கும் ஆத்மா நீங்கள்..

தீயவற்றிலும் தீயதைப் பார்க்காமல் நல்லதின் பாடத்தைக் கற்றுக் கொள்ளக் கூடிய அனுபவி மூர்த்தி நீங்கள்..

அமைதி சக்தி மூலம் தீயதை நல்லதாக மாற்றி விட்டு எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த ஆத்மா நீங்கள்..

செய்விப்பவர் செய்ய வைத்துக் கொண்டிருக்கிறார் என்ற இந்த நினைவு மூலம் நிமித்தமாகி ஒவ்வொரு கர்மமும் செய்யக் கூடிய கவலையற்ற ராஜா நீங்கள்..

தைரியம் மற்றும் ஊக்கம் உற்சாகத்தின் சிறகுகள் மூலம் பறக்கும் கலையில் பறக்கக் கூடிய தீவிர முயற்சியாளர் நீங்கள்..

சங்கமயுகத்தின் மதிப்பைப் புரிந்து ஒவ்வொரு நேரத்திலும் விஷெஷ கவனம் செலுத்தக் கூடிய ஹீரோ ஆத்மா நீங்கள்...

உயர்ந்த காரியம் மூலமாக தெய்வீக குணம் என்ர பிரபு பிரசாதத்தை அனைவருக்கும் கொடுக்கக் கூடிய பரிஷ்தாவிலிருந்து தேவதை ஆகும் ஆத்மா நீங்கள்..

நினைவை அனுபவத்தின் ஸ்திதியில் நிலைக்க வைக்கக் கூடிய நம்பர் ஒன் விஷேச ஆத்மா நீங்கள்..

மனம் புத்தியை ஒரு நிலைப்படுத்துவதன் மூலம் அனைத்து பலன்களையும் பிராப்தியாக அடையக்கூடிய சதா சக்திசாலி ஆத்மா நீங்கள்..

பாபாவிற்கு சமமாக இரக்க மனமுடையவராகும் அனைவரையும் மன்னித்து அன்பைக் கொடுக்கக் கூடிய மாஸ்டர் வள்ளல் ஆத்மா நீங்கள்..

தீமையான சங்கல்பத்தை நீக்கி அபகாரிகள் மீது உபகாரம் செய்யும் அன்பு நிறைந்த ஆத்மா நீங்கள்..

ஃபரிஸ்தா சொரூப நினைவின் மூலம் பாபாவின் குடை நிழலை அனுபவம் செய்யக் கூடிய தடைகளை வென்ற ஆத்மா நீங்கள்..

விகாரங்கள் என்னும் விஷப் பாம்புகளை கழுத்தின் மாலையாக ஆக்கக் கூடிய சங்கருக்கு சமமாக தபஸ்வி மூர்த்தி ஆகுங்கள்..

தேக உணர்விலிருந்து விடுபட்டவராகி பரமாத்ம அன்பின் அனுபவம் செய்யக் கூடிய கமல ஆசனதாரி ஆத்மா நீங்கள்..

சகஜயோகத்தின் பயிற்சி மூலம் சாதனங்களின் மேல் வெற்றியை அடையக் கூடிய பிரயோகி ஆத்மா நீங்கள்..

கட்டுப்படுத்தும் சக்தி மூலம் தவறை நேராக மாற்றிடும் சிறந்த முயற்சியாளர் நீங்கள்.

பாப்தாதாவின் சினேகத்திற்கு பிரதிபலனாக சமமாக மாறக்கூடிய தபஸ்வி மூரத் ஆத்மா நீங்கள்..

எப்பொழுதும் மற்றவரின் விஷேட தன்மையைப் பார்க்கின்ற மற்றும் வர்ணனை செய்கின்ற சிரேஷ்ட தன்மை நிறைந்த தூய அன்னப் பறவை ஆத்மா நீங்கள்..

தன்னுடைய மிகச் சிறந்த சொரூபத்தில் நிலைத்திருந்து அலௌகீக தன்மையை அனுபவம் செய்விக்கும் உள்முகமான ஆத்மா நீங்கள்

யோகத்தினுடைய பிரயோகம் மூலம் ஒவ்வொரு கஜானாவையும் அதிகரிக்கக் கூடிய வெற்றி தபஸ்வி ஆத்மா நீங்கள்..

ஒவ்வொரு எண்ணம் சொல் செயல் மூலம் புண்ணிய கர்மம் செய்யக் கூடிய ஆசீர்வாதத்தினுடைய அதிகாரி ஆத்மா நீங்கள்..

கண்களில் நிரந்தரமாக பிந்து பாபாவை இணைத்து வைத்து கஷ்டப்பட்டு முயற்சி செய்வதிலிருந்து விடுபட்டு இருக்கக் கூடிய சகஜ புருஷார்த்தி ஆத்மா நீங்கள்.

ஒவ்வொரு கர்மத்திலும் சத்தியவாதியாகி உண்மையான உள்ளத்தால் பாபாவை கட்டி போடக் கூடிய மந்திரவாதி ஆத்மா நீங்கள்.

மனம், புத்தியை சொப்பனத்தில் கூட சுபமாக சுத்தமாக வைத்திருக்கும் பாப்தாதாவின் சமிக்ஞகளை புரிந்து கொள்ளக் கூடிய புத்திசாலி ஆத்மா நீங்கள்.

தன்னுடைய இரக்க உணர்வு மூலமாக அசாந்தி மற்றும் துக்கத்தில் உள்ள ஆத்மாக்களுக்கு சுகம் அளிக்கக் கூடிய ரஹம்தில் ஆத்மா நீங்கள்..

தங்களுடைய சுபபாவனையின் சக்தி மூலமாக சாபத்தையும் ஆசீர்வாதமாக மாற்றக் கூடிய ஆசீர்வாத மூர்த்தி ஆத்மா நீங்கள்..

அன்பு மற்றும் பாவனையினால் சதா பாபாவின் இதய சிம்மாசனம் என்னும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கும் அற்புத ஆத்மா நீங்கள்..

சதா குழப்பத்திலிருந்து விடுபட்டு குஷியில் நடனம் ஆடிக்கொண்டிருக்கும் அலௌகீக அன்பு நிறைந்திருக்கும் ஆத்மா நீங்கள்..

ஒருவரில் முழு உலகத்தையும் அனுபவம் செய்து கொண்டே ஒருவருடைய நினைவில் இருக்கக் கூடிய சகஜயோகி ஆத்மா நீங்கள்...

சிரேஷ்ட நினைவின் மூலமாக சுகம் நிறைந்த நிலையை உருவாக்கக் கூடிய சுக சொரூப ஆத்மா நீங்கள்...

நொடிப்பொழுதில் எண்ணங்களை நிறுத்தக் கூடிய அப்பியாசத்தின் மூலம் கர்மாதீத் நிலையை அருகில் கொண்டு வரக் கூடிய ஆத்மா நீங்கள்..

ஒருமுக நிலையின் பயிற்சி மூலமாக மனம் புத்தியை அனுபவங்கள் என்ற சீட் மீது செட் செய்து விடும் நிர்விக்ன ஆத்மா நீங்கள்..

உறுதியான நம்பிக்கையின் ஆதாரத்தில் எப்போதும் வெற்றி அடையக் கூடிய பிரம்மா பாபாவின் சினேகி (நண்பன்) ஆத்மா நீங்கள்..

ஒரு பாபா என்ற சொல்லின் ஸ்மிருத்தியின் மூல நினைவு மற்றும் சேவையில் இருக்கக் கூடிய சத்தியமான யோகி சத்தியமான சேவாதாரி ஆத்மா நீங்கள்..

குழந்தையிலிருந்து எஜமானனாக மாறக் கூடிய ஸ்மிருதி மூலம் அனைத்து கஜானாக்களையும் தமதாக்கி கொள்ளும் சுவராஜ்ய அதிகாரி ஆத்மா நீங்கள்..

எனது எனது என்பதை உனதாக மாற்றி உயர்ந்த குறிக்கோளை அடைந்து விடும் நஷ்ட மோகா ஆத்மா நீங்கள்..

குடும்பத்தில் இருந்து கொண்டே உலகியல் வாழ்விலிருந்து விலகி இருந்து பிரபுவின் அன்பை பெறக் கூடிய ஈடுபாடுகளிலிருந்து விடுபட்டு இருக்கக் கூடிய ஆத்மா நீங்கள்.

ஆன்மீகத்தின் மூலம் ஆவேசத்தை அகற்றி தன்னை சரீர உணர்விலிருந்து உருகி விலக்கும் உண்மையான பாண்டவர் நீங்கள்..

தூய்மை நிறைந்த அன்பான பாலனையின் மூலம் அனைவரையும் அன்புக் கயிற்றில் கட்டிப் போடக் கூடிய மாஸ்டர் அன்புக்கடல் ஆத்மா நீங்கள்..

அதிசயத்தை காண்பிப்பதற்குப் பதிலாக அழிவற்ற பாக்கியத்தை பெற்றுள்ள அதிசயமான நட்சத்திரமாக தன்னை ஆக்கிக் கொள்ளும் சித்தி சொரூப ஆத்மா நீங்கள்..

பவித்திரத்தாவின் ஆழத்தை புரிந்து கொண்டு சுகம், சாந்தி நிறைந்தவராகும் மகான் ஆத்மா நீங்கள்

தந்தையை பின்பற்றவும் என்னும் மகா மந்திரத்தின் மூலம் ஒரு நிலையினை ஏற்படுத்தக் கூடிய சிரேஷ்ட முயற்சியாளார் நீங்கள்..